பக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

File -02

# உதயன்

விலை ரூபா 6·00

STAFF COPY NOT FOR SALE

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 20 செவ்வாய்க்கிழமை (02-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 127

# ஆறு ராணுவத்தினர் செங்கலடியில் பலி!

## புலிகளின் அதிரடியில்

சாவகச்சேரி, ஏப்ரல் 2

**மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி கறுத்தப்பாலப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு படையினர் உயிரிழந்தனர்; ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.**

சுமார் பத்து நிமிட நேரம் இத்தாக்குதல் நீடித்தது.

தமது தரப்பில் எதுவித சேதமுமின்றி நடத்தப்பட்ட இத்தாக்குதலில் ஏ. கே. ரகத் துப்பாக்கிகள் — 3, ஏ. கே. மகஸின் — 9, ஐ. எம். ரவைகள் — 420 ஆகியன கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். (உ-6-8-7)

## தளுவத்த அடுத்த மாதம் பதவி ஏற்பு

தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி. சில்வா அடுத்த மாதம் முதல் ஓய்வு பெறுகிறார். அவரின் இடத்துக்கு புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் ரொகான் தளுவத்த பதவி ஏற்பார்.

தற்போதைய தளபதி ஜெரி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இஸ்ரேல் சென்றிருப்பதை அடுத்து பதில் இராணுவத் தளபதியாக ரொகான் தளுவத்தை கடமையேற்றுள்ளார்.

## கடல்வழிப் பாதையையும் துண்டிக்க புலிகள் முயற்சி

கொழும்பு, ஏப். 2

வடக்கில் உள்ள பல்லாயிரக் கணக்கான படையினருக்கான விநியோக தரைப் பாதையை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள விடுதலைப் புலிகள், தற்போது கடல் வழிப்பதையையும் துண்டித்து படையினரின் செயற்பாட்டை ஸ்தம்பிதம் அடையச் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இப்படி அவதானிகள் சுட்டிக் காட்டுவதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

வடபகுதியில் உள்ள படையினருக்கான விநியோகத்தை தடை செய்து, படையினரின் தாக்குதல்களை பலவீனப் படுத்துவதே விடுதலைப் புலிகளின் உத்தியாகும் என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது.

[இ-3-6]

## மட்டுவிலை நோக்கி படையினர் ஷெல் வீச்சு

சாவகச்சேரி, ஏப். 2

நேற்று முன்தினம் இரவு மட்டுவில் பகுதியை நோக்கி இரு ஷெல்கள் வீசப்பட்டன.

இவற்றில் ஒரு ஷெல் மட்டுவில் அம்மன் கோவிலுக்கு தெற்குப் பக்கமாக உள்ள வீடு ஒன்றின் அருகே விழுந்து வெடித்தது.

அப்போது புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த செல்லையா தம்பிஐயா (வயது 78) என்பவர் காயமடைந்தார். பத்து நாள்களுக்கு முன் கன்று ஈன்ற பசுமாடு ஒன்றும் காயம் அடைந்தது. 5 பனை மரங்கள் முறிந்தன.

மற்றைய ஷெல் மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டுப் பகுதியில் விழுந்தது.

அது வெடிக்காததால் வீட்டில் இருந்தோர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

(இ-13)

## கந்தரோடையிலும், சுதுமலையிலும் படையினர் மீது புலிகள் தாக்குதல்

சாவகச்சேரி, ஏப். 2

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கும் கந்தரோடையிலும், சுதுமலையிலும் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

கந்தரோடையில் நேற்றுக் காலையும் சுதுமலையில் சனிக்கிழமை இரவும் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சுதுமலையில் இராணுவ முன்னணி காவலரணை ஊடுருவி புலிகள் தாக்கி இருந்தனர்.

இந்த இரு தாக்குதல் சம்பவங்களிலும் சேத விவரங்கள் கிடைக்கவில்லை.

(இ-3-7)

## அம்பாறை கடல் பகுதிக்கு அதிரடிப் படையினர் நகர்வு

சாவகச்சேரி, ஏப். 2

அம்பாறையில் எல்லைப்புற கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஆயிரம் விசேட அதிரடிப் படையினர், கடற்புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலையடுத்து கடற்கரை பாதுகாப்புக்கு அனுப்பப்படுகின்றனர்.

அம்பாறையைப் பாதுகாக்க வேண்டுமென்றால் மேலும் 3 ஆயிரம் அதிரடிப் படையினரை சேர்க்க வேண்டும் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-3)

## ஜனாதிபதி கருத்து குறித்து கூட்டணி தலைமை அதிருப்தி

கொழும்பு ஏப். 2

கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டில் தமிழ் அரசியல் கட்சிகள் குறித்துத் தெரிவித்த கருத்து, தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் அதிருப்தியை எற்படுத்தி உள்ளது என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அரசாங்கத்தின் தீர்வு யோசனை குறித்து தமிழ் அரசியல் கட்சிகள் இரட்டை வேடம் போடுவதாகஅப்பேட்டியில் ஜனாதிபதி குற்றஞ் சாட்டி இருந்தார்.

இது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி துணைத் தலைவர் .வீ. ஆனந்தசங்கரி கருத்துத் தெரிவிக்கையில் ஜனாதிபதியின் கருத்து நியாயமானது அல்ல என்று கூறி உள்ளார்.

(இ-6)

## ஹெலித் தாக்குதலில் தமிழக மீனவர் பலி

லண்டன், ஏப். 2

தமிழகத்தில் நாகை அருகே கோடியக்கரை கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் மீது ஹெலிக்கொப்டர் ஒன்று குண்டு வீசியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்த ஹெலிக்கொப்டர் இலங்கை விமானப்படையினுடையது என கருதப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

(இ-3)

## கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை புதிய தலைவர்

கொழும்பு, ஏப். 2

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியிட்ட அனா புஞ்சிஹேவா, நேற்று நடைபெற்ற சபையின் பொதுக் கூட்டத்தில் ஐந்து வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டார். "நவலோகா" நிறுவன உரிமையாளரின் மகனான உபாலி தர்மதாஸ புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அனா புஞ்சிஹேவாவின் தலைமையின் கீழ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இருந்த போதே உலகக் கிண்ண கிரிக்கெட் சாம்பியன் பட்டத்தை ஸ்ரீலங்கா வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-6)

## பாலபட்டபெண்டிக்கு கனடாவில் உயர் பதவி

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி தனது செயலாளர் பதவியிலிருந்தும் சட்ட ஆலோசகர் பதவியிலிருந்தும் விரைவில் ராஜினாமாச் செய்யவுள்ளார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்களை ஆதாரம் காட்டி "யுக்திய" செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜினாமாச் செய்யவுள்ள பாலபட்டபெண்டி கனடாவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்சிசன் தட்டுப்பாட்டை நீக்க நவீன கருவி வரும்

மந்திகை, ஏப் 2

மந்திகையில் இயங்கி வரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அடிக்கடி ஏற்படும் ஒட்சிசன் தாட்டுப்பாட்டைப் போக்கு முகமாக—

சூரிய ஒளியில் இயங்கி ஒட்சிசனைத் தானாகவே சேமித்து வைக்கும் நவீன கருவி ஒன்று—

விரைவில் இங்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான "ஒட்சிசன் கொன்சென்றேற்ரர்" [Oxygen Concentrator] என்ற இந்தக் கருவியை இங்கு அனுப்பி வைப்பதற்கு சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் வாக்குறுதி அளித்திருப்பதாக அறியவந்துள்ளது.

கொழும்பில், சுகாதாரப் பகுதி உயர்மட்ட அதிகாரிகள் குழுவை, இங்கிருந்து சென்ற தூதுக்குழு சந்தித்த போது ஒட்சிசன் தட்டுப்பாட்டினால் சத்திர சிகிச்சைகள் அடிக்கடி தடைப்படுவது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

கொழும்புலிருந்து ஒட்சிசன் சிலிண்டர்கள் கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தினாலேயே இந்நிலை ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலைமையை நீக்கும் பொருட்டு "ஒட்சிசன் கொன்சென்றேற்ரர்" கருவியை அனுப்புவதற்கு சுகாதார அமைச்சு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர்.

[அ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு பகுதியைபுலிகளிடம் ஒப்படைக்கும் முந்திய யோசனை இப்போதும் பொருந்தும்

## யாழ். நகரை கைப்பற்றியதால் நிலைமை மாறவில்லை என்கிறார் தொண்டா

கொழும்பு, ஏப். 2

வடக்கு - கிழக்கின் நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எனது முந்திய யோசனை இப்போதும் பொருந்தும்.

யாழ்ப்பாணத்தை அரச படைகள் கைப்பற்றிவிட்டதால் பெரிதாக மாற்றம் எதுவும் நிகழவில்லை.

தேர்தலின் போது கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேற்றப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால் இப்போது அவர்கள் அங்கே உள்ளார்கள். அவர்கள் இடம் மாறியுள்ளார்கள் அவ்வளவு தான்.

இவ்வாறு "சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எனது யோசனை ஏற்கப்பட்டிருந்தால் இரண்டு வருடங்கள் கழிந்திருக்கும். எத்தனையோ மக்களின் உயிர்களையும், நாட்டின் வளங்களையும் காப்பாற்றி இருக்கலாம் — என்றும் தொண்டமான் சொன்னார்.

1994 இல் நான் தெரிவித்த யோசனை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. அதுவே பிரச்சினையை விரைவாகத் தீர்ப்பதற்கு பயன்தரக் கூடிய மருந்து —

இன்று அதனைச் செய்தால் ஐந்து வருடங்களில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் ஜனநாயக வழிக்கு வந்துவிடுவார் — என்றும் அமைச்சர் தொண்டமான் கூறினார். (அ)

## அவசர சந்திப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் அத்தியாவசிய சேவைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தத்தமது பிரதேச செயலகங்களுக்குத் தவறாது சமூகமளிக்குமாறும் —

வலய பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் அந்தந்த வலய பணிமனைகளுக்கு சமூகமளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (இ)

## யாழ். மாவட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கு குறைந்த அளவு நிதி

சாவகச்சேரி, ஏப். 2

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அவற்றை இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் சகல திணைக்களத் தலைவர்களையும் கேட்டுள்ளார்.

மத்திய, மாகாண அமைச்சுக்களிடம் இருந்தும்—

நடுத்தர முதலீடு, பன்முகப் படுத்தப்பட்ட வரவு- செலவு, பிரமாண அடிப்படை, அவசர புனர்வாழ்வு புனரமைப்பு திட்டங்கள் ஆகியவற்றில் இருந்தும்— மட்டுப்படுத்தப்பட்ட நிதியே மாவட்டத்துக்கு கிடைப்பதாகவும் அவர் கூறினார்.

மாவட்டத்தில் கிடைக்கும் வளங்களை முன்னுரிமைப் படுத்தி செயற்திட்டங்களை வகுக்குமாறும்—

இது தொடர்பான திட்டங்களை செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதனுக்கு அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-3)


தென்மராட்சியில்

### பொருளியற் கல்லூரி

ஐயா கடைச் சந்தி, மீசாலை.

3 — 4 — 96 இல் ஆரம்பமாகவுள்ள பிரிவுகள் அனைத்தும் மாணவர்களால் நிறைந்துவிட்டதனால் அனுமதிகள் வழங்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைகைகப்பட்டுள்ளது. புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக விரைவில் அறிவிப்போம்.

**அனுமதிகள் பெற்ற மாணவர்கள் கவனத்திற்கு**

3 — 4 — 96 புதன்கிழமை பின்வரும் நேர அட்டவணையின்படி வகுப்புகளுக்கு வருகை தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

| நேரம் | DAY CLASS | A/L 96 | A/L 97 |
|---|---|---|---|
| 3 - 00 — 4 - 00 | ECO | COM | ACC |
| 4 - 00 — 5 - 00 | ACC | ECO | COM |
| 5 - 00 — 6 - 00 | COM | ACC | ECO |

(41285)



எம். கே. எஸ். வைத்தியசாலை

**M. K. S. MEDICAL CLINIC**

யாழ். குடாநாட்டில்
கே. கே. எஸ் வீதி, 3ம் கட்டை, கொக்குவில்—
கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.
ஆகிய இடங்களில் இயங்கிய மேற்படி ஸ்தாபனம்

03 — 04 — 1996 புதன் முதல்
யாழ். வீதி, கிளிநொச்சியில்
(சிவா வர்த்தக நிலையம் அருகில்)
தனது சேவையை ஆரம்பிக்கின்றது

குறிப்பு: முன் போல் சகலவிதமான மருத்துவ ஆய்வு கூட பரிசோதனைகளும் செய்து கொள்ளலாம்.

டாக்டர் மு. கனகசபை
C. M. C. Reg. No. 1481

(40489)



உ
சிவமயம்

### இருது ஜனன உதக சாந்தி வைபவ ★ அழைப்பு ★

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ ஹு பங்குனி மீ 21 ஆம் நாள் (03 - 04 - 1996) புதன்கிழமை, பகல் 9-00 மணி முதல் 10-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எமது ஜ்யஷ்ட புதல்வி மங்கை நல்லாள்

### "லலிதாம்பிகைக்கு"

இருது சாந்தி வைபவங்களை கரவெட்டி சாமியன் அரசடி ஞானவைரவ சுவாமி ஆலய அருகில் மகாராஜாஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் (மாமா) அவர்களின் ஆசியுடன் சான்றோர்கள் முன்னிலையில் செய்ய திருவருள் பாலித்துள்ளது.

இச் சுபவேளையில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக சமூகம் தந்து திவ்ய திருஷ்டியால் மங்கை நல்லாளை ஆசீர்வதித்து வாழ்த்தி மகிழ்விக்குமாறு பேரன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து!

தங்கள் நல்லரவை நாடும்:
(சித்தன்கேணி, ஏ. சோமசுந்தர ஐயர் பண்டிதர்,
வாத்தியார் ஐயா) மகன் சோ. சுப்பிரமணியசர்மா
தம்பதிகள்

சாமியன் அரசடி வைரவர் கோவில்,
கரவெட்டி. 02 - 04 - 96.

★ முக்கிய குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை

(4 C409)



வடமராட்சியில்
சதா பொன்ஸ் கல்வி நிறுவனத்தில்

### பொருளியற் கல்லூரி

மாலுசந்தி, நெல்லியடி.

**A/L 96, 97 கலை, வர்த்தகம்**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| வர்த்தகம் | — | வரதன் |
| அளவையியல் வணிகப் புள்ளி விவரவியல் | — | சயந்தன் |
| | — | தவசேகர் |

**ஆரம்பம்: 5-4-96** வெள்ளி 3-00 P. M.

**A/L 96 DAY CLASS**
(A/L 95 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
**ஆரம்பம்: 5 - 4 - 96** வெள்ளி 8-00A. M

★ அனுமதிகளை 4 - 4 - 96 இற்கு முன்பாகப் பெற்றுக் கொள்ளவும்.

(41284)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5-ம் நாள் கண்ணீர்ப் பூக்கள்

### சின்னத்தம்பி சிந்துஜன் (சிந்து)

தோற்றம்:- 24 - 04 - 1992
மறைவு:- 29 - 03 - 1996

செல்வமே! உன் அழகு முகமெங்கே?
உன் மழலை மொழியெங்கே?
உன் கம்பீர நடையெங்கே?
உன் வசைச் சிரிப்பெங்கே?
உன் தூக்கிய பள்ளிப் பையெங்கே
உன் உற்ற சொந்த மெங்கே
உன் சொந்தம் தான் நாமும்
உன் புதைகுழி வணங்கி
நித்தமும்தான்
உன் நாமம் பேற்றுகின்றோம்.

உன் நினைவால் வாடும்
குடும்பத்தினர்

சி. சிவானந்தம் (சித்தப்பா)
மீசாலை வடக்கு,
கொடிகாமம். (41283)

---

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

### சிவகுரு ஞானதாஸ் (தமிழினியன்)

(கெற்பேலி கிராம உத்தியோகத்தர் திரு. சிவகுருவின் தலைமகன்)

அன்னையின் அரவணைப்பில்: 1973 — 07 — 09
செல்வச்சந்நிதி முருகன் அரவணைப்பில்: 1995 — 03 — 15

தம்பி நீ எங்களை விட்டு ஒராண்டு அல்ல நூறாண்டு சென்றாலும் எங்கள் துயர் ஆறாது.

— குடும்பத்தினர்.

உசன், மிருசுவில். (41145)

---

## முக்கிய அறிவித்தல்

சேரன் பல்பொருள் வாணிபமாகிய எமது ஸ்தாபனத்தின் நிதியாண்டு **31 - 03 - 96** உடன் முடிவு பெறுவதனால் கீழ்க் குறிப்பிட்டுள்ள கடன்படுநர்கள் **04-04-96** இற்கு முன்னதாக எம்மைச் சந்தித்து நிலுவைகளை உறுதிப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

| | |
|---|---|
| க. ஜெயகாந்தன் (ஏ. ஜி. எண்ணைக் கடை) | கல்வியங்காடு |
| அன்னராசா களஞ்சியம் | யாழ்ப்பாணம் |
| இராமையா செட்டியார் | யாழ்ப்பாணம் |
| யோகராசா | கோண்டாவில் |
| ராஜ் எரிபொருள் நிலையம் | திருநெல்வேலி |
| சு. பாலகுமாரன் | கந்தர்மடம் |
| பிள்ளையார் களஞ்சியம் | யாழ்ப்பாணம் |
| நியூ வசந்தா களஞ்சியம் | கல்வியங்காடு |
| தீபன் களஞ்சியம் | திருநெல்வேலி |
| ஜெயதுர்க்கா | மானிப்பாய் |
| விநாயகர் களஞ்சியம் | அச்செழு |
| திருப்பதி ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் |
| நாகராஜன் | யாழ்ப்பாணம் |
| சிவஞானம் சிமியோன் | இருபாலை |
| ராஜா களஞ்சியம் | கோண்டாவில் |
| செல்வரட்ணம் (திருப்பதி) | அரியாலை |
| மணியம் களஞ்சியம் | திருநெல்வேலி |
| எஸ். ரீ. ஆர். சன்ஸ் | |
| புஸ்பா களஞ்சியம் | அரியாலை |
| ராஜ்குமார் | ஏழாலை |
| வே. சி. மணியம் | மானிப்பாய் |
| அருள் (ஐங்கரன்) களஞ்சியம் | திருநெல்வேலி |
| செந்தாமரை | யாழ்ப்பாணம் |
| அனுதினம் மருந்தகம் | சின்னக்கடை |
| நல்லை தொழிலகம் | இணுவில் |
| செல்வம் வர்த்தக நிலையம் | அச்செழு |
| எஸ். வி. முருகேசு | யாழ்ப்பாணம் |

பொறுப்பாளர்,
சேரன் பல்பொருள் வாணிபம்

(சி/4158)

---

# யாழ். ஆஸ்பத்திரிக்கு மந்திகையில் விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு அனுமதி

வடமராட்சி, ஏப். 2

யாழ். போதனா வைத்தியசாலை, அது இப்போது இயங்கும் மந்திகையில், நோயாளர் நலன் கருதி விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும்— வருடந்தோறும் போதனா வைத்தியசாலைக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பயன்படுத்தலாம் என்றும்— சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இதேவேளை—

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினம் கொழும்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தைச் சந்தித்துப் பேசிய போது— போதனா வைத்தியசாலையை யாழ். நகருக்கு மாற்றுமாறு கேட்கப்பட்டதாகவும், அங்கு பாதுகாப்பு இல்லை என்று கூறி அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவந்துள்ளது.

போதனா வைத்தியசாலை ஊழியர்களை வேறு மாவட்டங்களுக்கு மாற்றுவதற்கான அதிகாரமும் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு மாற்றுவதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

வைத்தியசாலையில் பணிபுரியும் அமைய சிற்றூழியர்களை நிரந்தரமாக்கும் பொருட்டு அவர்கள் எல்லோருக்கும் நேர்முகப் பரீட்சைகளை நடத்தி பெறுபேறுகளை கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறும் பணிப்பாளரிடம் கேட்கப்பட்டது.

அமைய சிற்றூழியர்களில் ஒரு தொகுதியினருக்கு ஏற்கனவே நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-173)

---

## தமிழீழ வானொலி

### செவ்வாய் மாலை

★ 5-00 — ஆரம்பம் — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சி கீதம்
★ 5-10 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியுகம்
★ 6-00 — புதியவை
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — என் தெரிவு
★ 6-30 —ஒலிபரப்பு நிறைவு

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### செவ்வாய் இரவு

★ 8-00 — ஆரம்பம்
★ 8-02 — கருத்துக்களம்
★ 8-15 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அறிவிப்புக்களைத் தொடர்ந்து 9-00 மணி வரை தாயகப் பாடல்கள்.

### புதன் காலை

★ 7-00 — ஆரம்பம்
★ 7-02—மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 மணி வரை நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-45— அறிவிப்புகள் தொடர்ந்து 8-00 மணி வரை மீண்டும் நீங்கள் கேட்டவை.

---


## JAFFNA NEW SCIENCE ACADEMY

ஐயா கடைச் சந்தி, சாவகச்சேரி.

### A/L 97, 96, 95 மீட்டல்

பிரிவு - II

★ கணித, விஞ்ஞானப் பிரிவு ★

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

ஆரம்பம்: **03 — 04 — 96** பிற்பகல் 3 மணி

குறிப்பு: (i) A/L **97, 95** மாணவர்களுக்கும் பி.ப. 3-00 மணிக்குதான் வகுப்பு ஆரம்பமாகும்.
(ii) பிரிவு - I இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(41382)

---

## ஞானோதய அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி.
(சோழன் நெல் அரிசி, வாணிபம் முன்பாக)

### A/L 96, 97 கலை வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. உதயன் |
| கணக்கியல்:- | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம்:- | திரு. பசில் |
| புள்ளிவிவரவியல்:- அளவையியல்:- | திரு. S.S. மனோகரன் |
| தமிழ்:- | திருமதி அ. மீரா |
| இந்துநாகரீகம்:- இந்துசமயம்:- | திரு. பாலா |
| புவியியல்:- | திரு. வேலா |
| அரசியல்:- | திரு. பஞ்சு |
| நாடகமும், அரங்கியலும்:- | திரு. ஸ்ரீகந்தவேள். |

ஆரம்பம்: **03 - 04 - 96** (பி. ப. 3 மணி)

★ **A/L 96 DAY CLASS** ★

(A/L 95 பரீட்சை எடுத்த மாணவர்கட்கு)

ஆரம்பம்: **03 - 04 - 96** காலை 8 மணி

குறிப்பு:
★ 200 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
★ 02 - 04 - 96 முன் உங்கள் அனுமதியை உறுதிப்படுத்தவும். (41305)


---

## கண்ணீர் அஞ்சலி

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பிரதம லிகிதரும், பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், வித்தியாலயத்தின் பழைய மாணவியுமாகிய செல்வி. ந. நிரஞ்சனி அவர்களின் பாசமிகு தந்தையாகிய

### திரு. நல்லையா நவரத்தினம்

அவர்கள்

30 - 03 - 96 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். கண்ணீர் அஞ்சலி செலுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், சிற்றூழியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை, பழைய மாணவர் சங்கம்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், கச்சாய் வீதி, அல்லாரை தெற்கு. (41301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Impulse Sealer With Cutter (பொலித்தீன் வெட்டுதல், ஒட்டுதல்) Lumala ஆடவர் சைக்கிள், National RX 45, விற்பனைக்குண்டு. ப. நவரத்தினராசா, வில்சன் வீதி, 1 ஆம் கட்டை, கிளிநொச்சி.

(40488)

Sony T. V. 20" கலர், National டெக் NV- G10 EM உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவன்நேசன், "சுமதி இல்லம்", வானர் குடியிருப்பு – புலோலி தென்மேற்கு, பருத்தித்துறை.

(40407)

2 உருக்கு அலுமாரி, 3 பெரிய சில்லு உள்ள ரெயிலர் தையல் மெசின், HITACHI ரேப் றேடியோ, Fisher PH 463 X ரேப் றேடியோ, K V 2020E Sony T V. தொடர்பு: ஆ. விநாயகமூர்த்தி, கோவிலடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை. (பளை விக்னேஸ்வரா பாடசாலை ஒழுங்கை)

(41309)

## விற்பனைக்குண்டு

அழகிய நல்லின "ஜேர்மன் செப்பேட் அல்சேஷன்" 1½ மாத ஆண் குட்டிகளும், 1½ வயதுடைய ஆண், பெண் நாய்களும் உடன் விற்பனைக்குண்டு. இல. 27, 1ஆம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி [சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்குப் பின்னால்]

(41303)

## சோதிடம்

ஜாதகக்குறிப்பு, கைரேகை, எண்விஞ்ஞானம் ஆகியவற்றின் மூலம் உங்களின் தொழில், கல்வி, விவாகம் முதலான பலன்களை அறிந்திட இன்றே நாடுங்கள். டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி. (அரசினர் வைத்தியசாலை முன்பாக).

[41307]

## நோயாளர் திடீர் திடீரென தலைமறைவு

தென்மராட்சி, ஏப். 2 சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் தங்கியுள்ள நோயாளர்கள் சிலர் திடீரென தலைமறைவாகி விடுகின்றனராம்.

தற்போது மருந்து வழங்கப்படாததும் நோயாளர்கள் சொல்லாமல் வெளியேறுவதற்கு காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது

## நாடகமும் அரங்கியலும்

**A/L 1996, 1997**

பிரத்தியேக வகுப்புக்கள்

க. ஸ்ரீகந்தவேள் B.A.

ஆரம்பம்:- 3- 04- 96 மாலை 4. 00 மணி.

தெய்வேந்திரா திரை அரங்குக்கு முன்பாக, 153, கண்டி வீதி, சாவகச்சேரி.

(41313)

## கல்வி மஞ்சரி G.C.E. O/L

க. பொ. த சாதாரணப் பரீட்சைக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய முன்னோடிப் பயிற்சி நூல் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நவீன சந்தை, சாவகச்சேரி.

(41311)

## விற்பனையாகிறது

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வெற்றிக்கனி இதழ்கள், மாதிரி வினா– விடைகள், அடிப்படை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, நவீன சந்தை மேல் மாடி, சாவகச்சேரி. 41310)

## தேவை

ஹோர்லிக்ஸ், விவா, ஜாம் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும். சோழன் வெற்றுப்பொருள் வாணிபம், யாழ்சாலை, சாவகச்சேரி.

(41274)

## O/L DEC'95

அரசாங்கத்தால் டிசம்பர் 95இல் நடத்தப்பட்ட O/L வினாத்தாள்கள் விடைகளுடன் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். வெளியீடு: Bond, த. பெ. 140, யாழ்ப்பாணம். (41143)

## G. C. E. O/L 1996/1997

வரலாறு - சமூகக்கல்விப் பயிற்சி ஆண்டு II, வரலாறு– சமூகக்கல்விப் படவேலை, தேசப்படத் தொகுதி 25 சத வீதக் கழிவுடன் – கமலா குணராசா, கமலாம்பிகை நூல் வெளியீட்டகம், 10, மகளிர் கல்லூரி வீதி, கற்குழி, சாவகச்சேரி.

[41110]

## உணவுப் பார்சல்கள்

ஜெசித்தாராவின் உணவுப் பார்சல்கள் தினமும் பிற்பகல் 12-00 மணி முதல் 3-00 மணி வரை. உங்களுக்கு அடக்கமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஜெசித்தாரா, (தேசியசேமிப்பு வங்கி முன் ஒழுங்கை), கண்டி வீதி, சாவகச்சேரி.

(41264)

# வகுப்பு

சமயபாட ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை, சுகாதார பெருந்தெருக்கள் சமூகசேவை அமைச்சின் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை, ஏனைய நியமன ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெற உள்ளன.

பாடம்:- பொது அறிவு

ஆரம்பம்:- **03 — 04 — 96** (புதன்கிழமை) மாலை **4. 30** மணி.

இடம்:- வடமராட்சி, அல்வாய் வடக்கு, சிறிலங்கா வித்தியாசாலை அருகில்.

ஆசிரியர்:- வே. தபேந்திரன் B. COM.

ஏற்பாடு

## இளங்கோ சனசமூக நிலையம்

அல்வாய் வடக்கு.

(40406)

## பத்திரிகை விநியோகஸ்த்தர் உடன் தேவை

உதயன் பத்திரிகையை விநியோகிக்க விநியோக ஆட்கள் உடன் தேவை.

வடமராட்சியில் அல்லது கிளாலிக்கு அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

உடன் தொடர்பு கொள்ளவும்:

உதயன் பணிமனை
சரசாலை
சாவகச்சேரி.

## மருத்துவ சேவை

வாதரோகங்கள், சரும ரோகங்கள், தொய்வு, நீரிழிவு, மலேரியா, உடல் மெலிவு, உடல் பருமன், தலைமுடி நரைத்தல், தலைமுடி உதிர்தல், பீனிசம், குழந்தைகளின் ரோகங்கள் உட்பட சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.

காலை **8. 30 — 12. 30** வரை
மாலை **3. 00 — 6. 00** வரை
(தினமும்)

**டாக்டர். த. சிவானந்தன்**
D. A. M, R. I. M. P. ( S. L )
"சிவா மருத்துவ நிலையம்"
கண்டி வீதி, சாவகச்சேரி.
(அரசினர் வைத்தியசாலை முன்பாக)

41306)

உ
கணபதி துணை

# சிவாச்சார்ய அபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் யுவ வருஷம் பங்குனி மாதம் 22 ஆம் திகதி (4- 4- 96) வியாழக்கிழமை காலை 10 மணி 34 நிமிஷம் முதல் 11 மணி 45 நிமிஷம் வரையிலான மிதுன லக்ன சுப முகூர்த்தத்தில் நீர்வேலி வாய்க்காற்தரவைப்பிள்ளையார் தேவஸ்தான ஆதீன கர்த்தர் சிவஸ்ரீ பிட்சாடனக்குருக்கள் அவர்களின் பேரனும், எனது ஏகபுத்திரனும் ஆகிய

**பிரம்மஸ்ரீ ஜெயந்திநாத சர்மா**

அவர்களுக்கு சிவாச்சார்யாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது, ஷ் வைபவம் வேதாகம அறிவில் சிறந்த பெரியோர்களால் கைதடி வீரகத்திப்பிள்ளையார் சன்னிதியில் நடைபெறும். உறவினர்கள், சிஷ்யர்கள் வருகை தந்து ஆசி பெற்று சிறப்பித்து வைக்கும் படி கேட்கின்றோம்.

இங்ஙனம்.
பிட்சாடன சந்திரசேகர குருக்கள்
கைதடிப் பிள்ளையார் கோயில்,
முதலாய கோயில்களின் பிரதமகுரு,
கைதடி.

(41308)

அருள்மிகு நெல்லியடி தடங்கன் புளியடி

# முருகமூர்த்தி ஆலய மணவாளக்கோல விழா

02 - 04 - 1996 செவ்வாய்க்கிழமை

காலை **7 - 30** மணி.
ஸ்நபன அபிஷேகக் கிரியைகளுடன் **1008** சங்காபிஷேகம்.

மாலை **3-00** மணி.
நாதஸ்வர கானமழை.
திரு. N. K. பத்மநாதன், திரு. P. முருகதாஸ்
திரு. T. உதயசங்கர், திரு. R. கேதீஸ்வரன் குழுவினர்

மாலை **5-30** மணி.
தெய்வீகப் பேருரை:- "பெரும் பெயர் முருகன்"
நிகழ்த்துபவர்:- திரு. க. சிவராமலிங்கம்.
(இளைப்பாறிய பிரதியதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

மாலை **6-30** மணி.
வசந்த மண்டபப்பூசையும், பூந்தண்டிகையில் சுவாமியின் வெளிவீதியுலாவும் (அவ்வேளையிலும் நாதஸ்வர கானமழை இடம்பெறும்), வழமைபோல் ஆனந்தக்காவடியும் இடம்பெறும்.

அனைவரும் வருக அருளமுதம் பெறுக.

(41281) ஆலய பரிபாலன சபையினர்.

# 1 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



**அமரர் பொன். சத்தியமூர்த்தி**

(வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பொது முகாமையாளர்)

சத்தியம்,
மரணத்தின் வழி சென்று மறைவாவதோ - சத்தியம்
மறையாது தினம் வாழும் மனவாசலில்.
பொதுச் சேவை புரிந்தனை புகழ்தேடினீர், நம்மைப்
பொழுதெல்லாம் துடித்தேங்க வழிசெய்ததேன்.
ஆண்டொன்று முடிவாகிப் போய்விட்டது - சத்தியம்
அஞ்சலிகள் ஒருகோடி தருகின்றனம்.

அன்ரன் செல்வராஜா குடும்பத்தினர்
நவீன களஞ்சியம்,
நெல்லியடி,
கரவெட்டி.

( 41272)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி வேட்டுக்களால் ஏறாவூர் பகுதியில் பதற்றம்

கொழும்பு, ஏப். 2

கடந்த வெள்ளி இரவு 8.00 மணி தொடக்கம் 9.30 மணி வரை தொடர்ச்சியாகக் கேட்ட துப்பாக்கி வேட்டு சத்தங்களால் ஏறாவூரில் பெரும் பதற்றம் நிலவியது.

ஏறாவூருக்கு மேற்கே உள்ள பொலீஸ் காவலரண்களில் இருந்தே இந்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

ஆற்றங்கரை மார்க்கமாக புலிகள் ஊடுருவி வந்தது தெரிய வந்தபோதே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக துப்பாக்கி வேட்டுக்களைத் திர்த்த பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

ஆனால் ஏறாவூருக்கு அருகில் உள்ள குடியிருப்பு மாரியம்மன் கோவிலுக்கு அண்மையில் உள்ள காவலரண் ஒன்றுக்கு அருகே கிரனேட் ஒன்று வெடித்ததை அடுத்தே ஏறாவூருக்கு மேற்கே உள்ள பொலீஸ் காவலரண்களில் இருந்து வேட்டுக்கள் தீர்க்க ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வேட்டுக்கள் தீர்க்க ஆரம்பிக்கப்பட்ட போது ஏறாவூர் பகுதி மக்கள் பலர் பாதுகாப்புக்காக கீழே விழுந்து படுத்துக் கொண்டனர். பெரும் பதற்றம் நிலவியது. (இ)

## உதயன்

### ஆட்சிப் பயண பொதி சுமத்தல்

இம்மாதம் நடுப்பகுதிக்கு முன்னர், தென்மராட்சி வடமராட்சிப் பகுதிகள் மீது இராணுவத்தினர் நடத்தத் திட்டமிட்டிருந்த பெரிய அளவிலான தாக்குதல் நடவடிக்கை சாத்தியமில்லை. அதற்கான வாய்ப்புகள் குறைவு — என்று இராணுவ ஆய்வாளர்கள் பலரும் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்காப் படைகளுக்குத் தேவையான நவீன ஆயுதங்கள், ஆயுத தளபாடங்கள் வந்து சேர்ந்து விட்டன. ஆட்சேர்ப்பு நடந்துவிட்டது; மேலும் ஆள் திரட்டல் நடைபெறுகிறது. குடாநாட்டில் பெரும் தாக்குதலுக்குப் படையினர் தயார் நிலையில் உள்ளனர். எந்நேரமும் தாக்குதல் ஆரம்பமாகலாம் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப் புலிகள் வெற்றிலைக்கேணியில் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, அரசு தனது திட்டத்தை மாற்றிவிட்டதாக, ஒத்திவைத்துள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எனினும் இது நிச்சயமானது என்று சொல்வதற்கும் இல்லை; முழுதாக நம்புவதற்கும் இல்லை.

துருப்புக்களுக்கான வான்வழி, கடல்வழி விநியோகங்களை, விடுதலைப் புலிகள் தாம் நடத்தும் தாக்குதல்கள் மூலம் தடுக்கும் வரை, வடக்கின் முழுப் பிரதேசத்தையும் கைப்பற்றுவது இயலாத காரியம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தவோ திட்டமிட்டு வகுக்கப்பட்ட படிமுறையின் படி இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்படுவதாகவும்—

சிங்கள – தமிழ் புது வருடத்திற்கு முன்னர் விடுதலைப் புலிகளை ஸ்ரீலங்காப் படைகளால் பூண்டோடு அழித்து விட முடியும் என்றும் — அர்த்தமின்றி உளறியிருந்தார்.

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கும், ஒழிப்பதப்பதற்கும் தெற்கின் அரசியல் தலைவர்கள் கால அவகாசம் விதிப்பது, தமது ஆட்சிக் காலத்தை உறுதி செய்வதற்கே அன்றி, உண்மையில் அதனை ஈட்டுவதற்கு அன்று.

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை ஒரு மாதத்தில் விரட்டி விடுவேன் என்று நாடாளுமன்றத்தில் சூளுரைத்து மூன்று மாதங்களாகியும் அதனை ஈட்ட முடியாது தலைகுனிந்த பின்னரும்—

விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழிப்பதற்கு காலக்கெடு விதித்தவர் ரத்வத்த.

முறைப்படி, அவர் புதுவருடத்தோடு பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும். சிங்கள மக்களை ஏமாற்றி, அவர்களுக்கு இராணுவ வெற்றிகளை கரட் தடியாகக் காட்டி, தமது ஆட்சிப் பயணப் பொதியைச் சுமக்க வைப்பது தெற்குத் தலைவர்களின் நடைமுறை அரசியலாகி விட்டது.

அதனால் ரத்வத்தையை ராஜிமானாச் செய்யுமாறு எதிர்க்கட்சியினராவது கேட்பரா என்பது சந்தேகமே!

## பாடசாலைகள் 11 ஆம் திகதி மூடப்படும்

சாவகச்சேரி, ஏப். 2

யாழ். மாவட்ட பாடசாலைகள் புதுவருட விடுமுறைக்காக எதிர்வரும் 11 ஆம் திகதி மூடப்பட்டு மீளவும் 17 ஆம் திகதி திறக்கப்படும் என்று வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு முதலாம் தவணைக்கு இம் முறை விடுமுறை வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது. [இ–3]

## வவுனியாவில் கடும் மழை

கொழும்பு, ஏப். 2

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை ஒரு மணி நேரம் கடுமையான மழை பெய்தது. இடி முழக்கத்துடன் பெய்த மழையால் சுமார் ஐம்பது வீடுகளும் சோதனை நிலையமொன்றும் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (இ–7)

## தமிழர்கள் கைதாவதை விசாரிக்க விரைவில் குழு

கொழும்பு, ஏப். 2

விசாரணை என்ற பேரில் தமிழர்கள் கைது செய்யப்படுவது, குறித்து —

விசாரிப்பதற்காக விசேட குழு ஒன்றை அரசாங்கம் விரைவில் நியமிக்கும் எனத் தெரிய வந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடு என்ற பேரில் கொழும்பிலும், தெற்கின் ஏனைய பகுதிகளிலும், வடக்கு – கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் தமிழர்கள் கண்ட கண்ட மாதிரி கைது செய்யப்படுவதும் —

பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைத்து இம்சிக்கப்படுவதும் சித்திரவதை செய்யப்படுவதும் —

நாளுக்கு நாள் மோசமடைந்து வருவது தெரிந்ததே.

இந்த அநியாயத்துக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக் குழு அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய போது வலியுறுத்தியது.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி தமிழர்கள் கைது செய்யப்படுவது, தடுத்து வைக்கப்படுவது குறித்து விசாரணை செய்வதற்கு விசேட குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. [அ]

## தெற்கு சோதனை நிலையங்களும் படையினரின் பதுங்குகுழிகளாம்!

### யுத்தம் இப்போது கொழும்பு வரை வந்துவிட்டது

கொழும்பு, ஏப். 2

கொழும்பு மற்றும் அரச படைகளின் கட்டுப்பாட்டில் தென்னிலங்கையின் பல பகுதிகளில்—

இராணுவமும், பொலீஸும் அமைத்துள்ள சோதனை நிலையங்கள், அவர்களைப் பாதுகாப்பதற்கான பதுங்கு குழிகளாகவும் அரண்களாகவும் மாறிவருகின்றன.

''வீக்கென்ட் எக்ஸ்பிரஸ்'' வார இதழின் பாதுகாப்புச் செய்தியாளர் டரில் டி சில்வா இவ்வாறு சாடியுள்ளார்.

போர் இப்போது வடக்கு— கிழக்குக்கு வெளியேயும் வந்து விட்டது. குறிப்பாக மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் பின்னர் தெற்கிலேயே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமடைந்துள்ளன.

ஆனால் பாதுகாப்பு—இராணுவத்துக்கும் பொலீஸாருக்குமா? அல்லது பொதுமக்களுக்கா? என்று கேட்குமளவுக்கு சோதனை நிலையங்களில் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு — கிழக்கில் மட்டுமன்றி படையினர் தெற்கிலும் பயப்பிராந்தியுடன் பணிபுரிவதையே இது காட்டுகிறது — என்றும் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அவர்கள் தமக்கென பதுங்கு குழிகள் அமைக்கவில்லை. ஆனால் இங்கு இராணுவத்துக்கு இந்தப் பயப்பிராந்தி ஏன்?— என்று அவர் வினா எழுப்பியுள்ளார். [அ]

## ராணுவ டிரக் மோதி ஒலிபரப்பு நிலையம் சேதம்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா தச்சன்குளம் பகுதியில் இயங்கி வந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வன்னி ஒலிபரப்பு அலைமாற்றி நிலையம் ராணுவ வாகனம் ஒன்று மோதியதால் சேதமடைந்துள்ளது.

இதனால் கடந்த சில நாட்களாக வன்னி ஒலிபரப்புச் சேவை நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ராணுவத்தினரால் ஓட்டி வரப்பட்ட டிரக் ஒன்றே இதன் மீது மோதியது.

இதனால் இந்த நிலையத்துக்கு 75ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும்—

டிரக்கை ஓட்டிச்சென்ற ராணுவ வீரரின் அணியைச் சேர்ந்தவர்கள் சேதமடைந்த நிலையத்தை புனரமைத்துக் கொடுப்பதாக உறுதி அளித்துள்ளனர் என்றும்— தெரிவிக்கப்படுகிறது. (இ)

## உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்படலாம்!

கொழும்பு ஏப். 2

எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள், நாட்டின் பாதுகாப்பு நிலைமையைப் பொறுத்து ஒத்திவைக்கப்படலாம் என்று அறியவருகிறது.

பிரஸ்தாப தேர்தல்களை நடத்துவது குறித்து தீர்க்கமான முடிவை எடுப்பதற்காக, அது குறித்த சாதக, பாதக நிலைமைகளை உள்ளடக்கிய அறிக்கையை, புதுவருடத்திற்கு முன்னர் தமக்குச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகளை ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை தேர்தல் நடத்துவது பாதகமானது எனத் தெரிவிக்கும் பட்சத்தில் அது ஒத்திவைக்கப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்கள் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டதால்—

மீண்டும் அதனை ஒத்திவைப்பதானால் நாடளாவிய ரீதியில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது அரசமைப்பு விதி என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## முப்படை தலைமையகங்கள் இடம் மாற்றப்படும்

கொழும்பு, ஏப். 2

கொழும்பில் கேந்திர இடங்களில் அமைந்துள்ள முப்படைகளின் தலைமையகங்களையும் இடம் மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தாக்கப்படலாம் என்ற அச்சமே இவை இடம் மாற்றப்படுவதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்த தலைமையகங்கள், கொழும்பின் பிரதான பொருளாதார அரசியல் மையங்கள் உள்ள பகுதிகளிலேயே அமைந்துள்ளன.

தலைமையகங்கள் தாக்கப்படுமானால் இந்த பொருளாதார, அரசியல் மையங்களும் பாதிக்கப்படும் என்று அரசாங்கம் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முப்படைகளுக்கும் இடையேயான செயற்பாடுகளை ஒருங்கமைத்துக் கொள்ளும் வகையில் —

முப்படைத் தளபதிகளுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இலகுவாகத் தொடர்பு கொள்ளும் வகையில் — புதிய தலைமையகங்கள் அமைய உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## உலர் உணவு விநியோகம் 5ம் திகதி முதல்

சாவகச்சேரி, ஏப். 2

இன்று ஆரம்பமாகவிருந்த 32ஏ முத்திரைக்கான உலர் உணவு விநியோகம் எதிர்வரும் 5 ஆம் திகதியில் இருந்தே ஆரம்பிக்கும் என செயலக திட்டப் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விநியோகத்தை முடிக்க வேண்டும் என்று அவர் ப. நோ. கூ. சங்கங்களை கேட்டுள்ளார். [இ–3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு தினத்தை முன்னிட்டு புதிய பணநோட்டுக்களை வழங்குக

## வங்கி முகாமையாளர்களிடம் கோரிக்கை

சாவகச்சேரி, ஏப். 2

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு — புத்தாண்டுக்கு முன்பதாக யாழ். மாவட்ட வங்கிகள் புதிய பணநோட்டுக்களை கொழும்பிலிருந்து தருவித்து தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கவேண்டும்.

இப்படிக் கோரும் தீர்மானமொன்றை யாழ். மாவட்ட அரச, தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கம் நிறைவேற்றி உள்ளது.

வழமையாக வங்கிகள் தமிழ் சித்திரைப் புத்தாண்டில் வாடிக்கையாளர்களுக்கு 100 ரூபா, 50 ரூபா, 20 ரூபா, 10 ரூபா நோட்டுக்களையும் 5 ரூபா சில்லறை நாணயங்களையும் கொழும்பில் இருந்து வரவழைத்து வழங்கி வந்தன என்றும்—

கடந்த ஒரு வருடமாக வங்கிகளால் புதிய நோட்டுக்கள் எதுவும் வழங்கப்படாததால் பழுதடைந்த நோட்டுக்களே புழக்கத்தில் இருப்பதாகவும் — பிரஸ்தாப சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# அரசின் சட்ட ஆவணத்தில் சமஷ்டி பற்றி எதுவுமில்லை

## பெருங்குறைபாடு என வர்ணிப்பு

கொழும்பு, ஏப். 2

இனப்பிரச்சினைத் தீர்வுகான அரசாங்கத்தின் சட்ட ஆவணத்தில் சமஷ்டி முறை அறிமுகப்படுத்தப்படவில்லை. இது அதில் உள்ள பெரும் குறைபாடாகும்.

இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்கா.

தமது கலாநிதிப் பட்டத்துக்கு அரசமைப்புப் பற்றிய ஆராய்ச்சியைச் செய்த றொகான் ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகைக்கு வழங்கிய நீண்ட பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

சட்ட ஆவணத்தின் பிரகாரம்—

ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டிருப்பினும், சமஷ்டி முறை அறிமுகப்படுத்தப்படவில்லை. சமஷ்டியின் முக்கிய அம்சங்களில் எதுவுமே அதில் இல்லாதது பெரும் குறைபாடாகும்—

எங்கள் நாட்டின் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டியே பெரிய அளவில் உதவும். இனப்பிரச்சினைக்கான தீர்வில் சமஷ்டியே பெரும் பங்கு வகிக்கவேண்டும் என்பதே எனது கருத்து. சமஷ்டி முறை இல்லாததால் சட்ட ஆவணம் மிகவும் பலவீனமானதாகவே கருதப்படவேண்டும் — என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

# பாடசலைகள் முழு அளவில் இயங்குவதற்கு ஆரம்பம்

சாவகச்சேரி, ஏப். 2

தென்மராட்சி, வடமராட்சிப் பாடசாலைகள் நேற்று முதல் முழுமையாக இயங்க ஆரம்பித்தன.

முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரையான வகுப்புகளும்—

இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றும் ஜி. சி. ஈ. உயர்தர, சாதாரணதர வகுப்புக்களும் — ஏற்கனவே ஆரம்பமாகியிருந்தன.

ஏனைய வகுப்புக்கள் நேற்று ஆரம்பமாகின.

சாவகச்சேரி இந்து மகளிர், மீசாலை விக்கினேஸ்வரா சாவகச்சேரி டிறிபேக் அல், லாரை அ. த, க. பா ஆகிய பாடசாலைகளில் இன்னமும் சொற்ப இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ளதால் அவற்றில் முழுமையாக பாடசாலைகளை இயக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஏனைய இடங்களில் உள்ள பாடசாலைகளை இயக்க இதுவரை 20 கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும்—

மேலும் 27 கொட்டில்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# டீசல் வழங்கப்படாததால் மின்சார நேரம் குறைப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு போதிய அளவு டீசல் வழங்கப்படாததால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மின்சாரம் வழங்கப்படுகிறது.

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலைக்கு போதியளவு டீசலை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை என்றும்—

இதன் காரணமாக தினமும் 5 மணி நேரமே ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# தெரேஸா காயம்

அன்னை தெரேஸா கல்கத்தாவிலுள்ள அவரது வீட்டில் வீழ்ந்து காயமடைந்தார். தோள்பட்டை எலும்பு முறிந்த நிலையில் அவர் கல்கத்தாவிலுள்ள ஓர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-8)

# குப்பையில் கிடந்த பொருள் வெடித்து

லாண்ட்மாஸ்டரில் ஏற்றிச் செல்லப்பட்டுகொட்டப்பட்ட கழிவுப் பொருள்களை எரித்த போது அதற்குள் கிடந்த பொருள் ஒன்று பெரும் சத்தத்துடன் வெடித்தது.

நேற்றுக் காலை எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூவர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்களில் ஒருவர் லாண்ட்மாஸ்டர் சாரதியான கறுப்பையா மாரிமுத்து (வயது 47) என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர் ஆவார். (இ.13)

## பாலபட்டபென்டிக்..

((1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் உயர் ஸ்தானிகராகப் பதவியேற்கலாம் என நம்பப்படுவதாகவும் —

இதுபற்றி ஜனாதிபதி மாளிகையிலும், அரசியல் வட்டாரங்களிலும் பேசப்பட்டுவருவதகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது. (இ-10)

# 10 யாழ். மாணவருக்கு வெண்தாமரைப் பரிசில்

கொழும்பு, ஏப். 2

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இரு பாடசாலைகளைச் சேர்ந்த 10 மாணவ, மாணவிகளுக்கு வெண்தாமரை இயக்க புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிசில்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த சனிக்கிழமை கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடந்த வைபவமொன்றில் வைத்து வழங்கினார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த பத்து மாணவர்களுக்கே இந்த புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதற்கென இந்த மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், வணசகோதரர் என 17 பேர் விமான மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனிறு கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [இ-7]

# ரஜனிகாந் நாடு திரும்புகிறார்

சென்னை, ஏப். 2

பிரபல நடிகர் ரஜனிகாந்த் வார இறுதியில் லண்டனில் இருந்து தாயகம் திரும்புவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவாரா என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை. (இ-3-8)

# கிராமிய அபி. வங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 2

கிராமிய அபிவிருத்தி வங்கிகளைச் சேர்ந்த 1,500 ஊழியர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தம் ஒன்றை நேற்று ஆரம்பித்தனர்.

வடபகுதி தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் 170 கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உள்ளன.

சுமார் 10 லட்சம் வாடிக்கையாளர்களை இவை கொண்டுள்ளன.

# அஞ்சலிக்கிறோம்

மந்துவிலின் சிந்தனை மைந்தன்
கடமையின் கண்ணிய மனிதன்
மக்கள் சேவையின் மகோன்னத தொண்டன்
அடக்கப்பட்ட மக்களின் அகல் விளக்கு
எங்களின் ஒருவன் பெருமையற்ற பேராளன்

## அமரர் சி. பற்குணம்

(வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக பிரதம செயலாளர்)

அவர்களின் இழப்பால் மந்துவில் சமூகம் சோகத்தில் மூழ்கியுள்ளது.

— மந்துவில் மக்கள் —

# மரண அறிவித்தல்

## கந்தையா இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் — ஏழாலை வடக்கு)

ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் கந்தையா இராசரத்தினம் நேற்று (01-04-96) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளைய தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரிஅம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், இராஜாம்பிகை, குகதாசன் [சுவிஸ்], மோகனதாஸன் [சுவிஸ்], ஜெகதாம்பிகை, சுந்தரதாஸன் ஆகியோரின் அன்புத் தந்தையும், S. T. வரதராஜன் [கிராம அலுவலர், வெற்றிலைக்கேணி], தேவசுந்தரி, கவிஸ்ரா, சிசிலியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்லம்மா கந்தையா, காலஞ்சென்ற ஆறுமுகம் [ஆசிரியர்], காலஞ்சென்ற இராசம்மா கந்திரசேகரம் [ஆசிரியை], பேரம்பலம், பேராசிரியர் குணரத்தினம் [துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜகுலசிங்கத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை [03-04-96] புதன்கிழமை தற்போதைய வதிவிடத்தில் காலை 11 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
S.T. வரதராஜன்
[மருமகன்]

தற்போதைய முகவரி:
ஏ. கனகலிங்கம்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

[41288]

# திருமணம் பிற்போடல்

நாளை (03 - 04 - 1996) புதன் கிழமை நடைபெறவிருந்த

அச்சுவேலி வடக்கு,
காலஞ்சென்ற சின்னப்பு —
செல்வமணி தம்பதிகளின்
புத்திரன்

**ரஞ்சன்**

அச்சுவேலி வடக்கு,
திரு. சி. யோகலிங்கம்
(அதிபர், யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்.) —
சிவமணி ஆகியோரின் புத்திரி

**ராதா**

அவர்களுக்கும் நடைபெற விருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை உறவினர்கள், நண்பர்கள், அழைக்கப்பட்டோர் அனைவருக்கும் அறிவிக்கின்றோம்.

குடும்பத்தினர்

(41286)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 02-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org